# காவல் கட்டுப்பாட்டு அறை துணை ஆணையராக சோனல் சந்திரா நியமனம்

**சென்னை, செப்.14:** சென்னை பெருநகரக் காவல் கட்டுப்பாட்டு அறை துணை ஆணையராக சோனல் சந்திரா நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை மாநில உள்துறை செயலர் நிரஞ்சன் மார்டி வெள்ளிக்கிழமை பிறப்பித்தார். சென்னை பெருநகரக் காவல் கட்டுப்பாட்டு அறையில் காலியாக இருந்த துணை ஆணையர் பணியிடத்துக்கு, காத்திருப்போர் பட்டியலில் இருந்த சோனல் சந்திரா நியமிக்கப்பட்டுள்ளதாக அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.